# வடக்கு-கிழக்குவிவகாரத்தில் புதியநடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழகக்கு விவகாரத்தில் அரசு மேற்கொண்டு வரும் நிலைப்பாட்டில் விரைவில் மாற்றங்கள் ஏற்படலாமென்று தெரியவருகிறது.

இது சம்பந்தமாக அரச உயர் மட்டத்தில் தற்போது விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும் அறியவந்துள்ளது.

அண்மைக் காலமாக தென்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 6 இதழ் 161

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21 — 07 — 1992

## வாகனேரி முகாம் மீது புலிகள் தாக்குதல்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வாகனேரி இராணுவமுகாம் மீது நேற்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று நடைபெற்ற இத தாக்குதலில் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இட்டுவின் பாக். விஜயம்: பாகிஸ்தான் மறுப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் திரு. கிட்டு ஆயுதம் வாங்குவதற்காக பாகிஸ்தான் சென்றிருந்தார் என்று இந்திய ஆங்கில சஞ்சிகை ஒன்று வெளியிட்ட செய்தியை இலங்கையிலுள்ள பாகிஸ்தான தூதரகம் வன்மையாக மறுத்துள்ளது.

'பயனியர்' என்ற சஞ்

[4ம் பக்கம் பார்க்க]

# ★ இந்திய அரசிடம்

# புலிகள் தடையை நீக்கக் கோரி

# தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

## 20 அமைப்புகள் நடத்தின

(சென்னை)

இந்திய அரசு தமிழீழ விதிதலைப் புலிகள் மீது விடுத்த தடையை நீக்கக் கோரியும் இலங்கையில் தமிழ்ப்பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவம் நடத்திவரும் தாக்குதல்களை நிறுத்தக்கோரியும் சென்னையில் நேற்றுக்காலை பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு ஆதரவாக தொடர் போராட்டம்

(சென்னை)

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி தமிழகத்தின் ஒவ்வொரு நகரிலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக நேற்று சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வல இறுதியில் முடிவு செய்யப்பட்டது.

விடுதலைப்புலிகளுக்குஆதரவு தெரிவித்து நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்ட பேரணிகளில் மக்கள் தாமகவே முன் வந்து கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ரி)

## தமிழர் மீதான போரை நிறுத்துமாறு கோரிக்கை

(சென்னை)

சென்னையில் நேற்று விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர், இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு முன்பாக இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அனைவரும் ஈழத் தமிழர் மீது சிறிலங்காப் படைகள் நடத்திவரும்

[4-ம் பக்கம் பார்க்க]

## சென்னை நகரில் நேற்று மற்றொரு பொதுக்கூட்டம்

[சென்னை]

சென்னையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்பின் மாலை மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்து தீவிரவாதிகள் ராவ், சவான் வீட்டின் எதிரே கத்தி,வாளுடன் ஆர்ப்பாட்டம்!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ஆகியோரின் வீட்டின் முன்னே இந்துத் தீவிரவாதிகள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

சுமார் 2000 இந்துத் தீவிரவாதிகள் வாள், கத்தி, பொல்லு, கற்கள் ஆகியவற்றுடன் இந்த ஆர்ப்பாட்டத்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படையை அழைத்தோர் மீது ஜனாதிபதி ஆவேசம்

(கொழும்பு)

இந்தியப்படையை அழைக்க வழிவகுத்தவர்கள் இன்று மலையக மீட்புப் பற்றி பேசுவதாக ஜனாதிபதி பிரேமதாசா கண்டனம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஐ. தே. க. கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இலங்கைக்கு இந்தியப் படையை அழைக்கவேண்டிய சூழலை ஏற்படுத்தியோர்இன்று மலையகத்தை தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து மீட்பது பற்றி பேசுகிறார்கள்.

எமது சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் குந்தகம் விளைவிக்க ஆதரவளித்தோர் யார்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராவ் பதவி விலகவேண்டும் கம்யூனிஸ்ட்கட்சி கோரிக்கை

[புதுடில்லி]

அயோத்தி பிரச்னையை பிரதமர் நரசிம்மராவ் சரியாக கையாளாததினால், அவர் பதவி விலகவேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அயோத்தி நகரில் ராமர் கோயில் கட்டும் பணி 13 நாட்களாக தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இந்தவேலையில ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்து தீவிரவாதிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் முஸ்லிம் மசூதியை

(4-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த (உ/த) பரீட்சை: அனுமதி அட்டைகள் கோட்டங்களுக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை (1992)க்குரிய பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள சம்பந்தப்பட்ட கோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ், கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

தீவகம் தவிர்ந்த ஏனைய பிரதேசத்து தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும்;

தீவகப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாழ்.கல்வித் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் யாழ். கல்வித்திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

(சு)

## ஆஸியில் சட்டவிரோதமாக குடியேறியோர் கைதாவர்

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக குடியேறியோர் கைதுசெய்யப்படும் வகையில் விரைவில் சட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலம் அடுத்த மாதம் அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் விரைவில் இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1992-ம் ஆண்டு ஏப்ரல் முடிவடைந்த 12 மாத காலத்தில் மட்டும் 81 ஆயிரத்து

(4ம் பக்கம் பார்க்க)

## 'நெருப்பு மழை'

(யாழ்ப்பாணம்)

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதனின் 'நெருப்பு மழை' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

(சு)

## வரி விளம்பரம்

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILA Capsules. கிடைக்குமிடம் எஸ்.ரி மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6552)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 863, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### Casio Data Bank Watches

Casio Data Bank Watches brought from Saudi only two in stock. Dilka Watch Works, 284, Stanely Road, Jaffna (Adjoining Vanavil Cool Bar). (C 6562)

### புதிய நூல்கள்

''கோப்பாய்-சிவம்'' வெளியிட்ட புதிய நூல்களை இன்னும் வாங்கவில்லையா? ''பொறுக்கிய முத்துக்கள்'' பொன்மொழித் தொகுப்பு அன்பர்களின் ஆட்டோ கிராபில் பொறிக்க உதவும். ''பூந்தோட்டம்''— குழந்தைகளுக்கேற்ற இனிய பாடல்கள். ''நொடியும் விடையும்'' மூன்று பாகங்கள் எங்கும் கிடைக்கும். (சி- 6546)

### தவறிவிட்டது

ஆ. சுந்தரலிங்கம் தேரிட்டி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி என்பவருடைய இல. 481670497 V அடையாள அட்டை. தற்காலிக அடையாள அட்டை, புகைப்படங்கள் மூன்று ரசீற் என்பன மணிபேர்சுடன் ஓமந்தைக்கும் அளவெட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டவிலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-6564)


# 'இடம்பெயர்ந்த மாணவருக்குசிறந்த கல்வியளிக்கப்படுகின்றது'

[சித்தன்கேணி]

''இப்பாடசாலை, பெற்றோர்கள், நலன்விரும்பிகள் பழைய மாணவர்கள் ஆகியோர்களுடைய ஆதரவினாலும் பங்களிப்பினாலும் பெரும் வளர்ச்சியடைந்திருப்பதை இன்று காணக்கூடியதாகவுள்ளது. அவர்களின் நற்பணிகள் தொடர வேண்டும்.

ஏனைய பாடசாலைகளும் இந்தப்பாடசாலையின் முன்மாதிரியை பின்பற்றவேண்டும்.''

இவ்வாறு வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில்குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் கா. சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கானை பிரதேச செயலர் செல்வி றாபினி கனகரத்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையில்: இப்பாடசாலையில் பெரும் தொகையான இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர் என்றும் அந்த மாணவர்களுக்கு சிறந்த முறையில் கல்விஅளிப்பதையிட்டு பாராட்டுவதாகவும் கூறினர்.

அண்மையில் வெளியான க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இரண்டு மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன. (137)

# சிறந்த சேவையாளர்கள் இளைப்பாறுவது பேரிழப்பாகும்

(வட்டுக்கோட்டை)

''ஒரு பாடசாலை முன்னேற்றமடைய வேண்டுமானல் அப்பாடசாலையின் அதிபர் சேவை மனப்பாங்குடையவராக, நேர்மையானவராக, எல்லோரும் விரும்பும் ஒழுக்கசீலராக இருக்கவேண்டும். அதிபர் கதிரவேலுஇவற்றுக்குமேலாக இன்னும் பல பண்புகள்நிறைந்தவராக இருந்தார்.

இப்படியான சிறந்த சேவையாளர்கள் இளைப்பாறுவது கல்வி உலகுக்கு பேரிழப்பாகவே அமைகிறது.''

அதிபர் கு. கதிரவேலு காரைநகர் வியாவில் சைவத் தமிழ் வித்தியாலய அதிபராக கடமையாற்றி இளைப்பாறுவதை முன்னிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் ஆசிரியர் கழகத்தினரும் இணைந்து நடத்திய பிரிவுபசார விருந்து வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப் பணிப்பாளர் திரு எஸ். வி. மகேசவேல் மேற்கண்டவாறு கூறினர்.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆரம்ப பிரிவு மண்டபத்தில் காரைநகர் வியாவில் சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் எஸ். பரமசிவம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. (139)

# போஷாக்கு உணவு கண்காட்சி

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டணிமனையினுல் ஏற்பாடு செய்யப்பட்ட ''சுககன முறையில் சிறந்த போஷாக்கு' என்ற கண்காட்சி மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் இம்மாதம் 30ம் திகதியும், 31ம் திகதியும் நடைபெறவுள்ளது.

30ம் திகதி வியாழக்கிழமையன்று பாடசாலை மாணவர்களுக்கும், 31ம் திகதி வெள்ளிக்கிழமையன்று பொதுமக்களுக்கும் இக்கண்காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

தினமும் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஐந்து மணிவரை இக்கண்காட்சி நடைபெறும். போஷாக்கு உணவு பற்றிய சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் இக்கண்காட்சியில் இடம் பெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)


## சுவிசேஷ ஆராதனைகள்

இடம்: இலங்கை பெந்தெகொஸ்தே சபை, உடுவில் ரேட், மானிப்பாய்.

காலம்: 1992 ஜூலை 21-ம் திகதி செவ்வாய் முதல் 23-ம் திகதி வியாழன் வரைக்கும்.

நேரம்: தினமும் மாலை 4 மணிக்கு

யாவரையும் அன்பாய் அழைக்கிறோம்.

விசுவாசத்துடன் வாருங்கள்! விடுதலையுடன் திரும்புங்கள்!

★ இலவச உட்பிரவேசம் ★ (சி-6563)



## JAM போத்தல்கள் நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும்

Tasty!

**Taste Line Industries (pvt) Ltd.**

இல. 14, சீனியர்லேன், யாழ்ப்பாணம்.

(ஏ 2306)


# இன்று

[பண்டத்தரிப்பு]

பணிப்புலம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 21-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து உற்சவங்கள நடைபெற்று இம்மாதம் 31-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று ரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (72)

# பாண் விலை குறைவு

[புலோலி]

வடமராட்சியின் சில பகுதிகளில் ஒரு றாத்தல் பாண் 6 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

நெல்லியடி, மந்திகை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் பாண் விலை குறைந்துள்ளது. (61)

# யாழ். இந்துப் பேரவை நேபாள மன்னருக்கு மகஜர்

(கொழும்புத்துறை)

இலங்கைததீவில் மக்கள் பெரும்பான்மையாகவும், இந்து சமயத்தவராகவும் உள்ள பகுதியில் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தவும் தமிழ்மக்களது இடம்பெயர்வுகளைத் தவிர்க்கவும் உதவுமாறு நேபாளமன்னருக்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள்விடுத்துள்ளது. அவ்வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இலங்கைத் தீவில் போர்த்துக்கீசரது வருகையினுல் தமிழினத்தின் தனியரசாக இருந்த பகுதி 1618ம் ஆண்டுமுதல் பிறநாட்டவராலும் இலங்கை அரசினுலும் இராணுவ முற்றுகைக்குட்பட்டு இந்துக் கோவில்கள் தகர்க்கப்படடும் இந்து தமிழ் மக்கள் நிமிடத்திற்கு நிமிடம் தாக்கப்பட்டும் இடம்பெயர்ந்தும் அகதிகளாக அலைந்துவருகின்றனர்.

எமது தாய்நாட்டில் எமது கோவில்களும், மக்களும் ஸ்ரீலங்கா அரசபடையினரால் டல தடவைகள் தாக்கப்படும் நிலையை உடன் நிறுத்தி அமைதியும் சமாதானமும் ஏற்பட வழி காணுமாறு இலங்கை அரசை வலியுறுத்தவேண்டும்'' யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரால் நேபாளமன்னருக்கு இம்மகஜர் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஸ்தானிகர் நிலையம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (154)

# குடும்பத்துக்கு 1 கிலோ சீனி

[மானிப்பாய்]

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் கிளைகள் மூலம் 1 குடும்பத்துக்கு 1 கிலோ சீனியை 27 ரூபா வீதம் தற்போது விநியோகித்து வருகின்றது. (71)

# சுவிஷேச ஆராதனைகள்

(யாழ்ப்பாணம்.)

மானிப்பாயிலுள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபையால் இன்று 21ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 23 திகதி வியாழக்கிழமை வரை தினமும் மாலை 4மணிக்குசுவிஷேச ஆராதனைகள் நடைபெறும்.

# முதலுதவிப் பரீட்சையில் சித்தி

(கொக்குவில்)

இலங்கை சென். ஜோன் அம்புலன்ஸ் கொக்குவில் மேற்கு பிரிவைச் சேர்ந்த முதலுதவிப் பயிற்சிபெற்ற 37 மாணவர்கள் கடந்த ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்தனர். [135]

# உற்சவம்

[பண்டத்தரிப்பு]

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் சடந்த 16ம் திகதி வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் 25-ம் திகதி சனிக்கிழமையன்று திருப்பலி பூசை, திருச்சொருப பவனி என்பவற்றுடன் இந்த உற்சவம் முடிவடையும். பூசைகளை சில்லாலை பங்குத்தந்தை மேற்கொண்டுவருகின்றார்' (72)


## பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்க்கும் தாதிய மாணவ/மாணவிகளைச் சேவையில் ஈடுபடுத்தல்

யாழ்ப்பாணம் தாதிய பயிற்சிப் பாடசாலையில் மாணவ தாதியராகப் பயிற்சி முடித்து பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சகல மாணவ தாதியர்களையும் 01-08-92 முதல் யாழ்ப்பாணம், பொது வைத்தியசாலையில் கடமைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர் செல்வி ந. கனகரட்ணம்
பணிப்பாளர்

பொதுவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
1992-07-20. (சி 2308)



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நாவலர் மண்டப தளபாட விநியோகத்திற்கான

## கேள்வி அறிவித்தல்

நாவலர் மண்டபத்திற்குத் தேவையான கைக் கதிரைகள், மேசை மற்றும் கரும்பலகை ஆகியவற்றை விநியோகம் செய்வதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 2500/-ம், கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 100/-ம் செலுத்துவதன் பேரில் 30-07-92ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் 30-07-92ஆம் திகதி பிற்பகல் 2-30மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-07-1992. (எ-2307)

# இந்த நூற்ருண்டு இறுதிக்குள் இந்தியாவே எய்ட்ஸில் முதலிடம் பெறும்

(ஆம்ஸ்ரடாம்)

இந்த நூற்ருண்டின் இறுதிக்குள் உலகின் மற்ற எந்த நாட்டையும்விட இந்தியாவில்தான் 'எய்ட்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் இருப்பார்கள் என சர்வதேச எய்ட்ஸ் மாநாட்டு' தலைவர் டாக்டர் கினத்தென்மான் எச்சரித்துள்ளார்.

ஆசியாவில் மாத்திரம் பத்துலட்சம்பேர் எய்ட்ஸிஞல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்' அடுத்த 10 வருடத்தில் இத்தொகை பல மடங்காக பெருகுமென்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆம்ஸ்ரடாமில் கடந்த ஆறு நாட்களாக நடைபெற்ற மேற்படி மாநாட்டில் உலகெங்கிலுமிருந்து பல நிபுணர்கள் கலந்துகொண்டு 'எய்ட்ஸி'ன் தாககம் பற்றிபல கருத்துகளை வழங்கியுள்ளனர். [சி]

## வடக்கு, கிழக்கில் 24 விளையாட்டு உத்தியோகத்தர் நியமனம்

[மானிப்பாய்]

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 24 புதிய விளையாட்டு உத்தியோகத்தர்கள் கடந்த வாரம் நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாச்சார விளையாட்டுத் துறை அமைச்சு வழங்கியுள்ளது.

இம் மாகாணத்துக்குத் தேவையான 71 விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்களில் தற்போது 19 பேர் மாத்திரமே சேவையிலுள்ளனர்.

இவர்களின்பற்ருக்குறையை நீக்குவதற்காக இம்மாகாண அமைச்சு விளையாட்டுத்துறை அமைச்சுடன் தொடர்புகொண்டு திறைசேரி மூலமாக மேற்படி 24 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிபெற்றது. (71)

## ராமர் கோவில் முயற்சியை கைவிட அரசு, நீதிமன்றம் விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

[புதுடில்லி]

இந்தியாவில் அயோத்தி நகரில் ராமர் கோவில் எழுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் விஸ்வஹிந்து பரிஷத் இயக்கம் தனது முயற்சியை கைவிட வேண்டுமென உத்தரப்பிரதேச மாநில பாரதிய ஜனதா கட்சியின் மாநில அரசு, மத்திய அரசு, நீதிமன்றம் என்பன கூட்டாக கேட்டுக்கொண்டுள்ளன,

இந்த கூட்டான அழைப்பைக்கூட விஸ்வஹிந்து பரிசத்' நிராகரித்துள்ளது. தமது முயற்சி தொடருமெனவும் அது அறிவித்துள்ளது.

தினம்தினம் அயோத்தியில் இந்துக்கள்கூட்டம் அதிகரித்து வருகின்றது. (கே)

## சனிவிலேஜ் முகாம் அகதிகள் மீது தாக்குதல்

[மன்னுர்]

மன்னுரில் 'சனிவிலேஜ்' அகதி முகாமில் வாழும் தமிழ் மக்கள் மீது தேசவிரோதிகள் குழு ஒன்று தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிககின்றன.

அண்மைக்காலங்களில் அகதி முகாம்களில தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் கடத்திச் செல்லப்பட்டு காணமல் போகும் சம்பவங்கள் அதிகரித்துமுள்ளன.

மேலும் அகதி முகாம்களில் தகுந்த அத்தாட்சியுடன் இருக்கும் ஆண்கள் கைதுசெய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. [சு-சி]

## நீரில் மூழ்கி மரணம்

(பண்டத்தரிப்பு)

கிணற்றில் குளிக்கச்சென்ற வயோதிபமாது ஒருவர் நீரில் மூழ்கி மரணமானுர் இளவாலைமாரீசன்கூடல் என்னுமிடத்தைச் சேர்ந்த பராசக்தி [வயது-65] என்பவரே நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமானவராவர். [72]

## உத்தரப் பிரதேசத்தில் முஸ்லிம் குழு குண்டு வீச்சு 32 பொலிஸார் படுகாயம்

[புதுடில்லி]

உத்தரபிரதேசமாநிலத்தின் ஒருபகுதியில் முஸ்லிம் கும்பல் ஒன்று பொலிசார் மீது நடத்திய குண்டுத் தாக்குதலில் 32பொலிசார் படுகாயமடைந்தனர்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதியில் இராமர் கோயில் கட்டுமாணப்பணியில் எழுந்துள்ள சிக்கலின் எதிரொலியாகவே இக்குண்டு வீச்சுதாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையில் இந்தியாவின் சில பகுதிகளில் இந்து முஸ்லிம் கலவரங்கள் ஆங்காங்கே நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இராமர் ஆலயம் கட்டும் பணியில் விஸ்வஹிந்து பரிஷத் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகிறது. தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இப்பணியில் ஈடுபட்டுவருகின்றனர். [சி]

## ரூபா-10,000 பெறுமதியான மருந்துவகைகள்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் மேற்கொண்ட நடவடிக்கையினுல் சங்கானை பட்டின உப அலுவலகத்தின் நிர்வாகத்தின்கீழ் செயற்பட்டுவரும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான இத்த ஆயுள்வேத மருந்து வகைகள் கிடைத்துள்ளன

## தையல்பயிற்சி நிலையங்கள்

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 3 தையல் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நிலையங்கள் அச்சுவேலி தெற்கு கிராம சேவகர் பிரிவு அலகுக்கிளை, கோப்பாய் தெற்கு கிராம சேவகர் பிரிவு, கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கப்பிரிவு அலுவலகம் ஆகியவற்றிலேயே ஆரம்பிக்கப்படவுள்ளன, 154)

## இராசி பலன்

**21.07-1992**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு ஆடி 06)**

ஷஷ்டி மு. ப. 10-54வரை, உத்தரட்டாதி மு ப. 10-54 வரை, இராகுகாலம் மாலை 3-01 முதல் 4-31 வரை, சுப நேரம் காலை 10-31 முதல் 12-01 வரை, அமிர்தசித்த யோகம்.

மேடம்: தேச சஞ்சாரம், மனஉளைச்சல், சுற்றத்தார் பகை.

இடபம்: மனையாள் நன்மை. பொருள் லாபம், தெய்வீக செலவு.

மிதுனம்: புத்திரர் சுகம், குடும்ப நன்மை, பணவிரயம்.

கடகம்: வீட்டில் துன்பம், அதிக யோசனை, அலைச்சல்.

சிங்கம்; குற்ற உணர்வு, வாக்குக்கலகம், தடுமாற்றம்.

கன்னி: நற்கருமம், பெண்களால் லாபம் பயணம்.

துலாம்: மனதில் சந்கோஷம், கடித உறவு, கண்ணியம்.

விருச்சிகம்: சுற்றத்தவர் பாசம், மனக்கிலேசம். வெறுப்பு,

தனுசு: ஒதுங்கிப்போதல், கண்வலி, காரியதாமதம்.

மகரம்: வஸ்திர லாபம், வேலைப்பழு, புதிய முதலீடு.

கும்பம்: உடல்நலம் குன்றல், விரோதம், குடும்பப் பிரிவு.

மீனம்: சயன சுகம், பந்து வரவு, முயற்சி பலிதம்.

— ஜோஸ்யர்

## சூரியகாந்தி, ஆமணக்கு எண்ணை வித்து உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் எண்ணெய் வித்து உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் விவசாயத்துக்கு விதையினங்களை வழங்குவதற்காகவென தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கோப்பாய் மாதிரிப் பண்ணையில் சூரியகாந்தி, ஆமணககு ஆகிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இங்கு உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் வித்துக்கள் 92/93 பெரும்போகச் செய்கை காலத்தின்போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. சூரியகாந்தியில் துருக்கி, ஸ்பெயின், பெரடோரியா ஆகிய வர்க்கங்களும், ஆமணக்கில் ஹசீரா வர்க்கமும் விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

150 கிலோ சூரியகாந்தி விதையிலிருந்து 50 கிலோ எண்ணெய் எடுக்கலாம். கொலஸ்ரோல் அற்ற சூரியகாந்தி எண்ணெயை உணவாகவும் மாஜரின் தயாரிப்புக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் சூரியகாந்தி பருப்பை பச்சையாகவோ வறுத்தோ உண்ணலாம். சூரியகாந்தி எண்ணெய் பெறப்பட்டதன்பின் மிஞ்சும் பிண்ணுக்கு சிறந்த கால்நடைத் தீவனமாகும். மேலும் சூரியகாந்தி எண்ணெய் பல கைத்தொழில் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆடிச்செவ்வாய் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆடிச்செவ்வாய் உற்சவம் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் அங்கு கூடும் பக்தர்களின் நலன்கருதி சென் ஜோன் முதலுதவிப்படை தொண்டர்கள் பணிபுரிவார்கள் என்று படையின் மாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி தெரிவித்துள்ளார்.

## விதை நிலக்கடலை உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

விதை நிலக்கடலை உற்பத்திக்காக தென்மராட்சிப் பகுதியில் நுணுவிலில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 92/93 பெரும்போகத்தில் கொடிகாமம், சாவகச்சேரி பகுதிகளில் நிலக்கடலை செய்கையை விஸ்தரிக்கும் நோக்கத்தின் கீழ் யாழ். மாவட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் இவ்விதை நிலக்கடலை உற்பத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,500 கிலோ விதை நிலக்கடலை விளைவாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தவில் மேதை சின்னராசா இந்த மண்ணுக்குப் பெருமைசேர்த்தவர்

(உடுவில்)

''ஒரு கலைஞனுக்கு ஒரு துறையில் மட்டும்தான் சிறப்படையமுடியும் எனக்கருதுவது தவறு. ஒரு கலையில் தேர்ச்சிபெற்ற ஒரு கலைஞன் ஏனைய கலைகளிலும் ஊடுருவிபாய்ந்து சிறப்படையலாம் என்பதை எமது நாட்டு கலைஞர்கள் நிரூபித்துள்ளனர். சின்னராசா போன்ற கலைஞர்கள் எமது நாட்டின் கலைவளங்களை வெளிநாடுகளில் வெளிப்படுத்தி தமிழர்களையும், நிமிர்ந்து நிற்க வைத்துள்ளார்கள்.''

தவில்மேதை என். ஆர். சின்னராசாவின் ஒராண்டு நினைவுதினக்கூட்டத்தில் உரையாற்றிய பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை உப அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் இவ்வாறு கூறினுர்.

இணுவில் கந்தசாமிகோவில் இளம் தொண்டர்சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சிகலாநிதி இ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இயல் இசை வாருதி பிரம்மஸ்ரீ நா. வீரமணி ஐயர் நினைவுரையாற்றுகையில் கூறியதாவது:

சமுதாயத்தால் புரிந்துகொள்ளமுடியாத ஒருபுதிர் கலைஞன் சமுதாயம் கலைஞனை புரிந்து கொண்டால் அற்புதமானதொரு உலகில் வாழமுடியும். இயற்கையின், செயற்பாடுகளான கடல் ஓசை, இடியோசை போன்ற பல்வேறு ஓசைகளை வாத்தியங்கள் மூலம் அளித்து துன்பத்தை மறந்த ஒரு அற்புத உலகிற்கு எம்மை அழைத்துச் செல்கிருன் கலைஞன். தவில் மேதை சின்னராசா இந்த மண்ணுக்கும் ஈழநாட்டுக்கும் தவிலுக்கும் பெருமை சேர்த்தவர் என்ருர். (109)

## இடம்பெயர்ந்த சுகாதார ஊழியர் விபரம் சேகரிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதாரதிணைக்களம் இராணுவ நடவடிக்கையினுல் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் கடமையாற்றிவரும் இடம்பெயர்ந்த ஊழியர்களின் விபரங்களை திரட்டி வருகின்றது.

வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் தங்கள் நிறுவனத்தில் கடமையாற்றிவரும் இடம்பெயர்ந்தஊழியர்களின் விபரங்களை உடனடியாக தமது பணிமனைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று யாழ். பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளர் விடுத்துள்ள அவசர சுற்றுநிருபம் ஒன்றில் கேட்டுள்ளார். (72)

## கிரிக்கெட்: சிறந்த வீரர்கள் இறுதிப் போட்டியில் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகளிடையே 15 வயதுக்குட்பட்ட வீரர்களிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்ட சென் பற்றிக்ஸ் கல்லூரி கோஷ்டியின் கப்டன் ஏ. நிஷாந்தன், பி பி. பிரஸன்ன எம் எச் ஜே. றெனூஸன் ஆகியோரும், சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் ராஜேந்திரனும் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மேற்படி இருகல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களான ஏ. நிஷாந்தன் சிறந்த பந்து தடுப்பு வீரராகவும் பி.பி. பிரஸன்ன சிறந்த பந்து வீச்சாளராகவும், எம். எச். ஜே. றெனூஸன் இப்போட்டியின் சிறந்த வீரனுகவும், சென். ஜோன்ஸ் கல்லூரி வீரன் ராஜேந்திரன் சிறந்த துடுப்பாட்ட வீரனுகவும் தெரிவு செய்யப்பட்டனர். (வி)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சிகளுக்கு கட்டுப்பாடு!

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்குக் கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், தமது அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிக்கக் கோரி விண்ணப்பிக்கும்போது அவர்கள் தமது செயற்பாடுகள் குறித்து நிரூபிக்கவேண்டும்.

அதாவது, அவர்கள் எவ்வளவு பேரைக் கடந்த காலங்களில் வெளி நாடுகளுக்கு அனுப்பினுர்கள். இவர்களில் பணிப் பெண்களின் தொகை சேர்க்கப்படமாட்டாது. அவர்கள், தமது அலுவல்களைக் கவனிக்கும் ஏஜன்டுகள், அவர்களால் நாட்டுக்குக் கிடைத்த அந்நியச் செலாவணி ஆகியவை பற்றியும் கவனத்தில் எடுக்கப்படும்.

இவர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் புகார்கள் குறித்தும் கவனத்தில் எடுக்கப்படும். குறிப்பாகச் சட்ட விரோதமாகக் கட்டணங்களை அறவிட்டார்களா என்று ஆராயப்படுமென்று தொழில் ராஜாங்க அமைச்சர் திரு. எஸ் ஆர். பியசிறி தெரிவித்துள்ளார். (சி)

# தென்பகுதியை சேர்ந்த 32 மீனவரை காணவில்லை!

(கொழும்பு)

தென்பகுதியிலிருந்து 8 வள்ளங்களில் மீன் பிடிக்கச் சென்ற 32 மீனவர்கள் காணமற்போயுள்ளனர்.

இவர்களைத் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதேவேளை மாலை தீவு, இந்தியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு இந்த மீனவாகள் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆயினும் காணமற்போன மீனவர் விடயம் தொடர்பாக இந்தியா, இந்தோனேஷியா, மாலைதீவு ஆகிய நாடுகளுடன் இலங்கை வெளி விவகார அமைச்சு தொடர்புகொண்டிருப்பதாகக் கடற்றெழில், நீரியல் வளத்துறை அமைச்சர் ஜோசப்மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் கடந்த 6ம் திகதி 8 வள்ளங்களில் 32 மீவவர்கள் மீன்பிடிக்கச் சென்றதாகவும், இவர்களில் மூவர் கடலில் மூழ்கியதாகவும், சிலர் தப்பி வந்ததாகவும் வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## பரிசாரகர்கள் பயிற்சிநெறி நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிற்றூழியர் தரத்தில் 92 பேருக்கான பரிசாரகர் பயிற்சி நெறி நேற்று யாழ். போதனு வைத்தியசாலையில் ஆரம்பமாகியது.

யாழ். போதனு வைத்தியசாலையிலிருந்து 42 பேருக்கும் பிற வைத்தியசாலையிலிருந்து 50 பேருக்கும் மூன்று மாத பயிற்சி வகுப்புக்கள் இங்கே தொடர்ந்து நடைபெறும்.

பரிசாரகர் பயிற்சி நெறிக்கு 42 பேர் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து சிற்றூழியர்கள் மட்டத்தில் பெரும் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (50)

## விளையாட்டுப் போட்டி

(புலோலி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 32வது வருடாந்த ஆண்டு விழாவும் விளையாட்டுப்போட்டியும் இம்மாதம் 25ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (61)

## விஞ்ஞான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கமும் யாழ் பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்தும் மாணவர்களுக்கான விஞ்ஞானக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நாளை 22-ம் திகதி காலை 9 00 மணிக்கு விஞ்ஞான பீடத்தில் திறந்து வைப்பார்.

இக்கண்காட்சி விஞ்ஞான பீடத்திலும், மருத்துவ பீடத்திலும் நாளை தொடக்கம் எதிர்வரும் 24-ம் திகதி வரையும் நடைபெறும்.

## சிறைச்சாலைகளில் கைதிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளிலும், விளக்கமறியல் சிறைச்சாலைகளிலும் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாடு பூராவும் 28 சிறைச்சாலைகள் உள்ளன. இவைகளில் வெலிக்கடையில் அமைந்துள்ள சிறைச்சாலையே மிகப் பெரியதாகும். இங்கு 6 ஆயிரம் விளக்க மறியல் கைதிகளும், 8 ஆயிரம் சிறைக் கைதிகளும் இருக்கின்றனர்.

### ஆசியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

500 பேர் விஸா முடிவடைந்தும் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஜெரி ஹான்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை உட்பட தெற்காசிய நாட்டவர்கள் அவுஸ்திரேலியாவில் தற்போது வாழ்ந்துவருவதால் மேற்படி சட்டம் இவர்களுக்கு பாதகமாக அமையக்கூடுமென அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (க)

## மரண அறிவித்தல்

### செல்வி நல்லபிள்ளை நாகமுத்து

(யாழ்/ நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை)

காரைநகர் மணற்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி நல்லபிள்ளை நாகமுத்து காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற சி. க. நாகமுத்து. பொன்னம்மாவின் அன்பு மகளும், செல்வி அன்னம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் சங்கானையில் இன்று 21-7-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சங்கானை விளாவெளி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ. சின்னத்துரை,
மாலியவத்தை,
சங்கானை. (சி-6565)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8

## சைவநெறி வினுவிடை

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆண்டு ஒன்பதிற்கான 'சைவநெறி வினுவிடை' பாடசாலைகட்கும், சமய நிறுவனங்கட்கும் வழங்கப்படவிருக்கிறது. (154)

### இந்திய தடையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று இந்நாட்டு மக்களுக்குத் தெரியும். இத்துரோகிகளுக்கு மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தால் நாட்டுக்குதுரோகம் இழைப்பர் என்றும் கூறினுர்.

லலித்-காமினி கோஷ்டியினரையே ஜனுதிபதி இவ்வாறு மறைமுகமாக சாடியுள்ளார். (சி)

### சென்னை நகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற இக்கூட்டத்திலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் பல அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகள் மீதான தடையைக் கண்டித்து இக்கூட்டத்தில் பலர் உரையாற்றினர். (ரி)

### கிட்டுவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிகை வெளியிட்ட இந்தச் செய்தியில் உண்மை எதுவும் இல்லை. இவ்வாறுனதொரு ஆயுத விநியோகத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டதில்லையென்றும் தூதரகம் தெரிவித்துள்ளது. (சி)

### இந்து. தீவிரவாதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயோத்தி ராமர் கோயில் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு கடைப்பிடித்து வரும் நிலையை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளையில் அயோத்தி விவகாரம் சிறிது சிறிதாக பூதாகார வடிவம் பெற்று வருவதாகவும் அது மற்றுமொரு இந்து முஸ்லிம் கலவரமாக உருப்பெறும் வாய்ப்பு அதிகரித்து வருவதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

### ராவ் பதவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் இடித்துவிடக் கூடுமென்பதனுல் அவர்களை ராமர் கோவில் கட்டும் பணியை நிறுத்துமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

ஆனுல் தொடர்ந்து இந்துக் கோயில் கட்டப்படுவதால், பாரதிய ஜனதாக்கட்சியின் ஆட்சியிலுள்ள உத்தரப்பிரதேச மாநில அரசை, மத்திய அரசு கலைக்கக்கூடுமென பரவலாகப் பேசப்படுகிறது. இதனையே பல எதிர்க்கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. (கே)

### வாகனேரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக சில மணி நேரம் நேரடி மோதல்கள் இடம்பெற்றன

இம்மோதல்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரிவுக்கப்படாதபோதிலும் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி)

## தட்டெழுத்து பயிற்சி நெறி

(பருத்தித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் தேசிய தொழில் பயிலுனர் சபையின் உதவியுடன் ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்துப்பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இவ்ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சிநெறிகள் கழகத்தின் பிரதான செயலமான வதிரி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சிக்குத தெரிவு செய்யப்படும் பயிலுனர்களுக்கு பயிற்சிக்காலத்தில் மாதாந்தம் 455/- ரூபா ஊக்குவிப்பு பணமாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## இந்துசமய பாட வகுப்பு

(கொழும்புத்துறை)

யாழ். கொழுமபுத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ பழனி அண்டவர் ஆலய பரிபாலகரால் இலவசமாக இந்து சமய பாடவகுப்புகள் ஞாயிற்று கிழமைதோறும் காலை8-00 மணிக்கு நடாத்தப்பட்டுவருகிறது. (154)

### இந்திய அரசிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசு விடுதலைப் புலிகள் மீது தடை விதித்த பின்னர் புலிகளுக்கு ஆதரவாக பாட்டாளி மக்கள் கட்சி தலைமையில் தமிழகத்திலுள்ள 20 அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

சென்னையிலுள்ள இலங்கை துணைத்தூதரகம் வரை ஆர்ப்பாட்டக்காரர் ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தினரின் கைகளில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் படம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ், தமிழ்தேசிய இயக்கத் தலைவர் பி. நெடுமாறன், எம். ஜி. ஆர். அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திருநாவுக்கரசு, முன்னுள் தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவதோடு இந்தியாவிலுள்ள இலங்கையின் எல்லா அமைப்புக்களையும் மூடும்படியும், ஈழத்தமிழர் மீது ஸ்ரீலங்கா படைகள் போர் நடத்திவருதால் இந்தியா இலங்கையுடன் ராஜீய உறவுகளைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமெனவும் கோரி ஊர்வலத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர். [ரி]

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் கொடர்ச்சி)

பகுதியில் அதிகரித்துவரும் அரசு எதிர்ப்பியக்கங்களை சமாளிக்கும் நோக்குடனேயே அரசு இந்த மாற்றங்களை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு தற்போது வடக்கு கிழக்கு விவகாரத்தில் மேற்கொண்டு வரும் போக்கில் இதன் மூலம் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிராக தென் பகுதியில் எதிர்ப்புக்கள் அதிகரித்துவருவதாலும், திடீர் தேர்தல் ஒன்று எதிர்பார்க்கப்பட்டிருப்பதாலும் இந்த மாற்றங்களைச் செய்யவேண்டியநிலை அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கணிப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் வடக்கு கிழக்குப் பகுதியில் முடிவில்லாமல் கேள்விக்குறியுடன் நடைபெற்றுவரும் யுத்தம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவு விழுங்கிக்கொண்டிருப்பதால், தாம் பெரிதும் பாதிக்கப்படுவதால் தென்பகுதியில் மக்கள் எதிர்ப்பியக்கங்களிலும் ஈடுபட ஆரம்பித்திருப்பது தெரிந்ததே.

### தமிழர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போரை நிறுத்தக் கோரிக் குரல் எழுப்பினுர்கள்.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டம் சுமார் ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் உரையாற்றுகையில், தமிழீழ மக்களின் விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ததில் பிரதமர் நரசிம்மராவ் தவறுன முடிவை எடுத்துள்ளார் என்று கூறினுர்.

திரு. திருநாவுக்கரசு உரையாற்றுகையில், ராஜீவ் காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்ற ஊகத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா புலிகளைத் தடை செய்யும்படி மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுத்ததற்காக ஜெயலலிதா மீது குற்றம் சாட்டினுர். (ரி)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி எல். குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிலே யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பிரதம விருந்தினராகவும் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். செல்லத்துரை சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொண்டனர். திருமதி இராஜேஸ்வரி துரைராஜா பரிசில்களை வழங்கினுர். (52)